பக்கங்கள்:-22

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 28 | வியாழக்கிழமை | 11.07.2024 | அதிர்வு 345 |
|---|---|---|---|---|---|

## ஓர் உயிரைப் பலி வாங்கிய ரயில்வே வேலைநிறுத்தம்!

ரயில் துறையினரின் திடீர்ஒ பணிப்புறக் கணிப்பு ஓர் உயிரைப் பலி வாங்கியிருக் கின்றது.

ரயில் சேவையினரின் பணிப்புறக் கணிப்பால் பல ரயில் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டன. இதனால்

06




# கூட்டமைப்பில் மட்டும்தான் என்றாலேயே செல்வத்துக்கு தலைமைப் பதவியை தரலாம்

## தமிழரசின் அரசியல் குழு நேற்றிரவு கூடித் தீர்மானம் தமது எம்.பிக்களின் நிலைப்பாட்டுக்கு அங்கீகாரம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் மட்டும்தான் இருக்கின்றோம், (குத்துவிளக்குச் சின்னத்தைக் கொண்ட) ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் இல்லை என்ற நிலைப்பாட்டை ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெளிவுபடுத்தி உறுதிப்படுத்தினால் மட்டுமே கூட்டமைப்பின் நாடாளுமன்றத் தலைமை பதவியை அவருக்கு விட்டுக் கொடுக்க வேண்டும்.

- இவ்வாறு தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு நேற்றிரவு நிகழ்நிலையில் கூடித் தீர்மானித்ததாக அறிய வந்தது.

06

## மீண்டும் சாவகச்சேரி வைத்தியசாலையை வைத்தியர் அர்ச்சுனாவே பொறுப்பேற்பார்!

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை தெரிவிப்பு





சாவகச்சேரி வைத்தியசாலையில் நீண்டகாலமாக பல பிரச்சினைகள் இருந்துள்ளன என்று தெரிவித்துள்ள கடற்றொழில் மற்றும் நீரியல்வளத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வைத்தியர் இராமநாதன்

06




நேற்றிரவு நிகழ் நிலையில் நடந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்திற்குக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா சமூகம் தரவில்லை. ஏன் வரவில்லை என்று யாருக்கும் தெரியவில்லை. வர மாட்டேன் என்று யாருக்கும் அவர் அறிவிக்கவுமில்லை. அவர் தலைமையில்தான் கூட்டம் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. கூட்டம் நடைபெறுவது பற்றி நேரத்துடன் பொதுச்செயலாளர் அவருக்குத் தகவல் கொடுத்திருந்தார். எனினும் நேற்றுக் கூட்டம் ஆரம்பமான நேரத்தில் இருந்து பல தடவைகள் தொலைபேசி மூலம் அவருடன் தொடர்பு கொள்ள முயற்சி எடுக்கப்பட்ட போதிலும் அவர் இணைப்பில் வரவில்லை.

அதற்கு முன்னதாக நேற்று யாழில் ஊடகங்களுக்குப் பேட்டியளித்த அவர், அந்த பேட்டியினூடாக, அன்று (நேற்று) பகல் நடைபெறும் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்றக்

06





# முதல் தடவையாகக் கறுவாச் செய்கை அபிவிருத்திக்காக புதிய திணைக்களம்

## பிரதான அலுவலகத்தை ஜனாதிபதி திறந்து வைத்தார்

"சரியான பொருளாதார முறை மூலம் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லாவிட்டால் நாட்டுக்கு கிடைத்த வெற்றிகளை இழக்க நேரிடும். நாட்டின் பொருளாதாரத்தை சீரழிக்க சிலர் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். அந்த பொய்களில் சிக்கினால் நாடு மீண்டும் நிரந்தரமாகப் பொருளாதார வீழ்ச்சியை எதிர்கொள்ளும்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

காலி கரந்தெனிய பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கறுவா அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தை நேற்றுப் பிற்பகல் திறந்து வைக்கும் நிகழ்வில் ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த நாட்டில் முதல் தடவையாக கறுவா அபிவிருத்தி திணைக்களம் என்ற புதிய திணைக்களத்தை ஸ்தாபிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் 2023ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட பரிந்துரையை நடைமுறைப்படுத்தும் வகையில் அதன் பிரதான அலுவலகம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

கறுவா அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோக–பூர்வ இணையத்தளமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

கறுவாக் கைத்தொழிலை ஊக்குவிப்பதற்காக தயாரிக்கப்பட்ட பத்தாண்டு கால வரைபடம் மற்றும் கறுவாச் செய்கை தொடர்பில் தயாரிக்கப்பட்ட "கறுவா கையேடு" தொழில்நுட்ப பிரசுரமும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

தெரிவுசெய்யப்பட்ட கறுவா தொழில் முயற்சியாளர்களுக்கு புயீ மற்றும் புஜ சான்றிதழ்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

"200ஆண்டுகளுக்குப்பிறகுகறுவாஅபிவிருத்தித்திணைக்களத்தை ஆரம்பித்திருக்கிறோம். அதன்படி, நாட்டில் கறுவாச் செய்கையை மேம்படுத்தும் பணிகள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாட்டில் மீண்டும் கறுவாச் செய்கையை அபிவிருத்தி செய்வது இத்திணைக்களத்தின் பொறுப்பாகும். முதலில் கறுவா உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அங்கு, ஒவ்வொரு ஏக்கரிலிருந்தும் அதிகபட்ச உற்பத்தியைப் பெற வேண்டும். மேலும், குறைந்த தரத்திலான கறுவாவுக்குப் பதிலாக உயர்தரத்திலான கறுவா வகைகளை வளர்க்க வேண்டும்.

மேலும், கறுவா பயிரிடும் நிலப் பரப்பை அதிகரிக்க வேண்டும். அரசாங்கம் புதிய காணிகளை வழங்குவதற்கும் அவர்களின் நிலத்தில் ஏனைய பயிர்களுடன் கறுவாவைப் பயிரிடுவதற்கும் திட்டமிட்டுள்ளது. இந்த நடவடிக்கை மூலம் கறுவா உற்பத்தியை மூன்று முதல் நான்கு மடங்கு வரை அதிகரிக்கலாம்.

மேலும் கறுவா விற்பனையை அதிகரிக்க வேண்டும். விற்பனை இல்லாமல் உற்பத்தியை அதிகரிப்பதில் எந்தப் பயனும் இல்லை. எனவே, விற்பனையை அதிகரிக்கத் தேவையான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆலோசனைகளை வழங்க நடவடிக்கை எடுக்க முடியும். நிறுவனங்கள் அந்தப் பொறுப்பை ஏற்குமானால் அரசாங்கம் அவர்களுக்கு ஒத்துழைக்க எதிர்பார்க்கிறது.

எனவே, புதிய சந்தை வாய்ப்புகளைப்பெற்று முன்னேற வேண்டும். கரந்தெனிய பிரதேச கறுவா அபிவிருத்தி நிலையமாக இந்த நிறுவனத்தை மாற்ற எதிர்பார்த்துள்ளோம். பழைய முறைப்படி அன்றி நவீன முறைப்படி இந்த விவகாரங்கள் முன்வைக்கப்பட வேண்டும். எதிர்காலத்தைத் தேடி நாம் கடந்த காலத்தை அடைந்திருக்கிறோம்.

இறக்குமதிப் பொருளாதாரத்தில் நீடித்தது தான் நமது நாடு வங்குரோத்தடைவதற்கு முக்கிய காரணமாகும். இறக்குமதிக்காக பெரிய அளவில் கடன் வாங்கினோம். சரியான பொருளாதாரக் கொள்கைகளால், இன்று நாம் வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட முடிந்தது. அத்துடன் நாம் செலுத்த வேண்டிய கடனில் இருந்து சுமார் 08

தொடர்ச்சி▼






# முதல் தடவையாகக் கறுவாச் செய்கை அபிவிருத்திக்காக புதிய திணைக்களம்

## பிரதான அலுவலகத்தை ஜனாதிபதி திறந்து வைத்தார்

தொடர்ச்சி▲

பில்லியன் டொலர்கள் குறைக்கப்பட்டு 2043 ஆம் ஆண்டு வரை கடனை செலுத்த கால அவகாசம் வழங்கப் பட்டுள்ளது. ஏற்றுமதி பொருளாதாரத்திற்கு நாம் செல்ல வில்லை என்றால் இன்னும் 15 வருடங்களில் நமது நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையும். அப்படியானால், நாம் விரைவில் ஒரு புதிய பொருளாதாரக் கட்டமைப்புக்கு செல்ல வேண்டும். அங்கு ஏற்றுமதி பொருளாதாரம் மூலம் அந்நிய செலாவணியை ஈட்ட வேண்டும்.

அன்று நாம் உலகிற்கே கறுவாவை கொடுத்தோம். இப்போது நாம் அந்த நிலைமைக்குத் திரும்ப வேண்டும். அக்காலத்தில் புத்தளத்திலிருந்து ஹம்பாந்தோட்டை வரை கறுவா பயிரிடப்பட்டது. அந்தச் செயற்பாடுகளை திட்டமிட்ட அடிப்படையில் மீண்டும் ஆரம்பிக்க வேண்டும். மேலும், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் புதிய முத லீடுகளைப் பெறவும் நாங்கள் பணியாற்றி வருகிறோம்.

இரண்டு வருடங்களுக்கு முன் நாட்டில் நிலவிய நிலை மையைச் சொல்லத் தேவையில்லை. இந்த நாட்டை மீட்க முடியாது என்று சிலர் கூறினர். நான் பேராசையில் ஆட்சிக்கு வந்தேன் எனச் சிலர் கூறினர். எப்படியோ நாம் நாட்டை மீட்டு விட்டோம். நாம் சரியான பாதையில் செல்லாவிட்டால், இந்த வெற்றி நம் கையிலிருந்து நழுவக்கூடும். இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான வழியை நாம் இப்போது காட்டியுள்ளோம். ஒவ்வொரு நபர்களும் வெவ்வேறு விடயங்களைச் சொல்கிறார்கள். பல்வேறு சுவர்க்கலோக வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றன. ஆனால் நாட்டின் வெற்றியை எவ்வாறு பாதுகாத்து முன்னேறுவது என்பதில் கவனம் செலுத்த வேண்டும். எனவே இன்னும் 10 வருடங்கள் இந்த சரியான பாதையில் சென்றால் எந்த பிரச்சினையும் இல்லாமல் அபிவிருத்தி அடைய வாய்ப்பு இருக்கிறது.” – என்றார்.







# பிரச்சினைகளின் போது ஓடி ஒளிந்த தலைவர்கள் வீரவசனம் பேசுமளவுக்கு நிலைமை மாறியுள்ளது

## வர்த்தக, சுற்றுச்சூழல் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் தெரிவிப்பு



**“நாட்டில் நெருக்கடி ஏற்பட்ட போது ஓடி ஒளிந்தவர்கள் இன்று தேர்தல் மேடைகளில் வீர வசனம் பேசுமளவிற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைக் கட்டியெழுப்பி யுள்ளார். ஜனாதிபதி தைரியமாக சவாலை ஏற்று நாட்டை கட்டியெழுப்ப பாடுபட்டதால் நாடு இந்த நிலைக்கு வந்துள்ளது.”**

**- இவ்வாறு வர்த்தக, சுற்றுச்சூழல் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந் திரன் தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“கடந்த காலத்தில் பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந் திருந்த இந்நாடு, தற்போது படிப்படியாக முன்னேறி வரு கின்றது. எங்களுக்கு இன்னும் பல சவால்கள் இருக்கின் றன. இந்த சவால்களுக்கு மத்தியில் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முடிந்தளவு இந்தப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளைக் கண்டு வரு கிறது. எரிபொருள் வரிசை போன்று கடந்த காலங்களில் காணப்பட்ட பாரிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள் ளது. கடந்த காலத்தில் கையில் பணமிருந்தாலும் தமக் குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்பட்டது.

இன்று அந்த நிலை மாற்றமடைந்துள்ளது. மேலும், பொரு களின் விலைகள் தற்போது ஓரளவு குறைந்துள்ளன. அது இன்னும் குறைய வேண்டும். ஏனென்றால் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு வாழ்க்கைச் சுமை அதி கரித்துள்ளது. ஆனாலும் நாடு பொருளாதார ரீதியில் எழுச்சி கண்டு வருகின்றது. அந்தப் பிரச்சினையும் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

அதற்காகத் தான் நாமும் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்த போது சிலர் நாட்டை விட்டு ஓடினர். இன்னொரு பிரிவினர் குறிப் பாக அரசியல் தலைவர்கள் சிலர் நாட்டிற்குள் ஒளித்துக் கொண்டனர். இன்னும் சில அரசியல் தலைவர்கள் நாட்டைப் பொறுப்பேற்க முன்வரவில்லை. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் துணிச்சலாக முன்வந்து இந்நாடைப் பொறுப்பேற்றார்.

அவ்வாறானதொரு பிரச்சினையான கால கட்டத்தில் நாட்டை விட்டு ஓடியவர்கள், ஒளித்துக்கொண்டவர்கள், பொறுப்பேற்க முன்வராதவர்கள் உள்ளிட்ட இன்னும் சிலர் நாடு பற்றி எரியும்போது, மக்கள் ஒரு பயங்கரமான சூழலில் இருக்கும்போது, தேர்தலை உடனடியாக நடத்துமாறு கோரி னர். குழம்பிய குட்டைக்குள் மீன் பிடிப்பது இலகு என்று அவர்களுக்குத் தெரியும். அந்தப் பிரச்சினையை வைத்து தமது அரசியல் இலாபத்தை தேடிக்கொள்வதே அவர்களின் எதிர்பார்ப்பு.

ஆனால் தற்போதைய ஜனாதிபதி நாட்டு மக்கள் மீது சுமத் தப்பட்டுள்ள பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ப திலே அதிக கவனம் செலுத்தினார். அவ்வாறு கவனம் செலுத்தியதால் தான் இன்று முடிந்தளவு பிரச்சினை களுக்குத் தீர்வு கண்டுள்ளோம். ஒரு இராஜாங்க அமைச்ச ராக நானும் என்னைப் போன்று ஏனையவர்களும் இவ் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதற்கு தம்மால் இயன்றளவு பங்களிப்பு வழங்கியுள்ளோம்.

இன்று அனைவரும் தமது நாளாந்த செயற்பாடுகளை வழமைபோன்று முன்னெடுக்க முடிந்துள்ளது. குறிப்பாக அன்று போராட்டத்தின்போது ஒளிந்துகொண்டவர்களும் இன்று பயமின்றி மேடைகளில் தேர்தலை நடத்துமாறு கோரும் அளவுக்கு நாட்டின் நிலைமை மாறியிருக்கின்றது. ஜனாதிபதியும் அரசாங்கமும் தைரியமாக முன்னெடுத்த வேலைத்திட்டங்களே இதற்குக் காரணம். அதனை யாரும் மறக்கவும் முடியாது, மறுக்கவும் முடியாது. மேலும், மக்க ளுக்கு இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

மேலும், இந்நாட்டிற்கு குறைந்த விலையில் பொருள்களை இறக்குமதி செய்தாலும் கூட, அதைக் கூடிய விலைக்கு விற்கின்ற அல்லது அதிக விலைக்கு விற்பதற்கு விலை யைத் தீர்மானிக்கின்ற ஒரு பாரிய மாபியா ஒன்று இருக்கி ன்றது. இந்த விடயத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றேன். கூட்டுறவுச் சங்கங்கள் நேரடியாக பொருள்களை இறக்குமதி செய்து, சுமார் 03 மில்லியன் அங்கத்தவர்களைக் கொண்ட அவர்களின் வலை யமைப்பின் ஊடாக பொருலளை விநியோகிக்கும் போது மக்களுக்கு குறைந்த விலையில் பொருள்களை விற் பனை செய்ய முடியும்.

உலகில் பல்வேறு நாடுகள் பொருளாதார ரீதியில் வீழ்ச்சி யடைந்த போது அந்நாட்டின் கூட்டுறவு அமைப்பின் ஊடா கவே குறைந்த விலையில் மக்களுக்கு பொருள்களை விநி யோகித்தன. அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகளில் கூட் டுறவுக் கட்டமைப்பு பலமாக இருக்கின்றது. உதாரண மாக, இந்தியாவைக் குறிப்பிடலாம். அங்கு அரசாங்கம் கூட்டுறவு அமைப்பின் ஊடாகவே பொதுமக்களுக்கு குறைந்த விலையில் பொருட்களை விநியோகிக்கின்றன. எனவே நாமும் அங்குள்ள கூட்டுறவு சங்கங்களுடன் இணைந்து நேரடியாக இந்நாட்டின் சதொச போன்ற அரச நிறுவனங்கள் பொருள்களை நேரடியாக இறக்குமதி செய்தால் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியும். அவ்வாறான பணிகளை ஊக்குவிக்கும் வகையில் நாம் செயற்பட்டு வருகின்றோம்.

மேலும், தற்போது இடம்பெற்று வரும் அரச உத்தியோகத் தர்களின் தொழிற்சங்க நடவடிக்கையைப் பற்றி கூறுவ தென்றால், இந்நாட்டை ஆட்சி செய்த அரசாங்கங்கள் தொழி லாளர்களின் கோரிக்கைகளை முற்றாகப் புறக்கணிக்க வில்லை. அவ்வப்போது வருகின்ற அரசாங்கங்கள் தொழி லாளர்களின் நலனில் அக்கறை செலுத்தி வந்துள்ளன. படிப்படியாக சம்பள அதிகரிப்பும் செய்துள்ளன. தொழிற் சங்கங்களுக்கு போராடுவதற்கு உரிமை இருக்கின்றது. அவர்களின் கோரிக்கைகளில் நியாயமும் இருக்கின் றது.

ஆனாலும் இந்நாடு தற்போது தான் பாரிய வீழ்ச்சி யில் இருந்து எழுச்சி கண்டு வருகின்றது. இவ்வாறான சூழ் நிலையில் திடீரென்று எல்லாவற்றையும் சீர்செய்ய முயற் சித்தால் மீண்டும் இந்நாடு அதளபாதாளத்தில் விழுந்து விடும். ஏற்கனவே இருந்த எரிபொருள் தட்டுப்பாடு காணப்பட்டிருந்தால் இன்று நானும் நீங்களும் இங்கே வந்திருக்க முடியாது. நாடு தற்போது கட்டியெழுப்பப்பட்டு வருகின்றது. நாம் காலங்காலமாக உற்பத்திப் பொருளா தாரத்தில் கவனம் செலுத்தாமல், இறக்குமதியை நம்பி பழகிவிட்டோம்.

நாங்கள் விவசாய நாடு என்று கூறிக்கொண்டாலும் இன்னும் அரிசியை இறக்குமதி செய்து வருகின்றோம். தற்போது தான் நாம் படிப்படியாக பொருளாதார ஸ்திர நிலைக்கு வந்து கொண்டிருக்கின்றோம். எனவே தொழிற் சங்கங்களின் நியாயமான கோரிக்கைகளை அரசாங்கம்

தொடர்ச்சி▼

# பிரச்சினைகளின் போது ஓடி ஒளிந்த தலைவர்கள் வீரவசனம் பேசுமளவுக்கு நிலைமை மாறியுள்ளது

## வர்த்தக, சுற்றுச்சூழல் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவிப்பு

தொடர்ச்சி▲

என்ற அடிப்படையில் ஏற்றுக்கொண்டாலும் கூட அவற்றை எல்லாம் ஒரே இரவில் செயற்படுத்த முடியாது. பணத்தை அச்சடித்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முற்பட்டதால் தான் நாட்டின் பணவீக்கம் அதிகரித்தது. இந்நாடு மீண்டும் ஒரு பொருளாதார வீழ்ச்சியை நோக்கி செல்லாமால் மிகக் கவனமாக நாம் செயற்பட வேண்டியுள்ளதால் அவர்களின் கோரிக்கைகளை படிப்படியாக நிறைவேற்ற முடியும்.

ஒரு வீட்டில் பிரச்சினை ஏற்பட்டால், அவ்வீட்டின் தலைவர் பிள்ளைகளை விட்டு விட்டு ஓடிவிட முடியாது. அவ்வாறு ஓடினால் அவரை வீட்டின் தலைவராக ஏற்றுக்கொள்ள முடியாது. நாட்டிற்கும் அவ்வாறுதான். எமக்கும் நன்றி உணர்வு இருக்க வேண்டும். நாம் அனைத்தையும் இலகுவில் மறந்து விடக் கூடாது. இந்நாடு பற்றி எரிந்த நிலையில் நாட்டை விட்டு ஓடிய, நாட்டில் ஒளிந்துகொண்ட மற்றும் நாட்டை பொறுப்பேற்க முன்வராத அரசியல் தலைவர்களுக்கு நாம் ஆதரவு வழங்குவதா? அவர்களும் இப்போது வெளியே வந்து அவர்களை பெரிய வீரர்களாக வீர வசனம் பேசி தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். இவர்கள் போன்றவர்களுக்கு ஆதரவு வழங்கினால் என்ன நடக்கும்? எனவே இந்நேரத்தில் நாம் நன்றியுடன் யாருக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று பொது மக்களும் சிந்திக்க வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துகளுக்கு மாறுபட்ட கருத்தில் நாம் அன்று இருந்தாலும் கூட, தற்போதைய சூழலில் நாட்டை பொறுப்பேற்று பொருளாதார ரீதியில் ஸ்திர நிலைக்கு கொண்டு வந்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுதல் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்னும் உத்தியோகபூர்வமான அறிவிக்கவில்லை. எனவே அவர் அவ்வாறு அறிவித்த பின்னர் எமது நிலைப்பாட்டையும் நாம் அறிவிப்போம்.

மேலும், ஊடகவியலாளர்களிடம் நான் ஒரு வேண்டுகோள் விடுக்கின்றேன். இன்று மேடைகளில் வீர வசனம் பேசுகின்றவர்களிடமும், பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக நாட்டில் ஏற்பட்ட போராட்ட கால கட்டத்தில் நாட்டை விட்டு ஓடிய, நாட்டில் ஒளிந்துகொண்ட மற்றும் நாட்டை பொறுப்பேற்க முன்வராத அரசியல் தலைவர்களிடமும் நீங்கள் ஏன் அவ்வாறு செய்தீர்கள் என்று கேளுங்கள். அவர்கள் என்ன பதில் சொல்கிறார்கள் என்பதைக் கேட்க பொது மக்கள் போன்று நானும் ஆவலுடன் இருக்கின்றேன்." – என்றார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குழுத் தலைவராக செல்வம் அடைக்கலநாதன் தெரிவு செய்யப்படுவார் என்று கோடி காட்டி இருந்தார். ஆனால் நாடாளுமன்றக் குழு அதற்கு மாறாக முடிவு எடுத்திருந்தது. அந்தக் கோபத்திலோ என்னவோ அவர் நேற்று இரவு நடைபெற்ற அரசியல் குழு கூட்டத்தில் தலை காட்டவில்லை.

செல்வம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற குழுவின் தலைவர் பதவியை பெற்றிருப்பாரானால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உயிரோடு இருப்பதாகக் கருதி, காட்டி, நாடாளுமன்றுக்கு வெளியில் அதன் தலைமைப் பதவியை – சம்பந்தரின் இடத்தில் தாமே இருந்து கொண்டு – கொண்டு நடத்த முடியும் என்ற மாவை சேனாதிராஜாவின் கனவு நேற்று பிற்பகல் நடைபெற்ற நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தின் முடிவினால் அடிபட்டுப் போய்விட்டது.

நேற்று இரவு அரசியல் குழுக் கூட்டத்திற்கு அவர் சமூகம் தராமல் விட்டமைக்கு இந்த அதிருப்தி காரணமோ, என்னவோ தெரியவில்லை.

அரசியல் குழுவின் நேற்றைய கூட்டத்தின் ஆரம்பத்தில் கருத்து வெளியிட்ட சிறிதரன், மேற்படி தலைமைப் பதவியை செல்வமும் சுமந்திரனும் பகிர்ந்து செய்யலாம் என்பதைத் தான் காலையில் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் குறிப்பிட்டிருந்தமையைச் சுட்டிக் காட்டினார். ஆயினும் செல்வம் கூட்டமைப்பில் இல்லாத காரணத்தினால் அது பொருந்தி வரவில்லை என்று சொல்லிய சிறிதரன் தானும் சுமந்திரனும் அதைப் பகிரலாம் என்றும், தான் அந்தத் தலைமைப் பதவியில் தொடர, சுமந்திரன் சம்பந்தனுக்கு ஆற்றிய முறைமையில் தொடர்ந்தும் சம்பந்தப்பட்ட வேலைகளை முன்னெடுக்கலாம் என்றார்.

எனினும் அது குறித்து, அதை ஒட்டியோ, வெட்டியோ, அந்த யோசனையை வரவேற்றோ, எதிர்த்தோ கூட்டத்தில் ஒருவரும் கருத்து கூறாமல் போகவே, சிறிதரனுடைய கருத்தோடு அந்த யோசனை நின்று போயிற்று.

ஆயினும் அச்சமயத்தில் குறுக்கிட்ட துரைராஜசிங்கம் இப்பொறுப்பை சுமந்திரனிடமிருந்து பறிப்பது என்றால் சுமந்திரன் அப்பதவியில் இருந்து கீழிறக்கப் படுகின்றார் என்றும், மற்றொருவர் மேல் உயர்த்தப்படுகின்றார் என்றும் அர்த்தம் வரும், அவற்றையும் கவனத்தில் கொண்டு விடயங்களை தீர்மானியுங்கள் என்று சொன்னார் என அறிய வந்தது.

கூட்டமைப்பு ஒற்றுமைக்காக செல்வத்துக்கு அந்த பதவியை விட்டுக் கொடுத்து, அவருக்காக அப்பணியை சம்பந்தனுக்கு ஆற்றியமை போல் தொடர்ந்து ஆற்ற வேண்டும் என்று கட்சி எதிர்பார்க்குமானால் அதைச் செய்வதற்குத் தான் தயார் என்று கூறிய சுமந்திரன், ஆயினும் சம்பந்தனுக்காக அந்தப் பணியை செய்வதற்கும், வேறு ஆட்களுக்காக அவ்வேலையைத் தாம் செய்வதற்கும் இடையில் வேறுபாடுகள் உண்டு என்பதையும் சுட்டிக்காட்டினார் எனத் தெரிகிறது.

இதற்கிடையில் வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெற இருந்த தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் ரத்து செய்யப்பட்டு விட்டதாக அறியவந்தது.

தமிழரசுக் கட்சியின் வழக்கு விடயம் வரும் 19ஆம் திகதி திருகோணமலை நீதிமன்றத்திற்கு மீண்டும் வருகின்றது.

அது தொடர்பில் ஒத்த நிலைப்பாட்டை எதிராளிகள்அனைவரும் எடுப்பது குறித்த முடிவை மேற்கொள்வதற்கு நேற்று மாலை சுமந்திரன் உட்பட எதிராளிகளின் சட்டத்தரணிகள் ஒன்று கூடி பேசினர்.

சட்டத்தரணிகளின் இணக்கத்தை கட்சியின் மத்திய குழுவின் அங்கீகாரத்தோடு நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்ல முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்காகவே ஞாயிற்றுக்கிழமை மத்திய குழு கூட்டம் முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது. ஆனால் இப்போது மத்திய குழுக் கூட்டம் ரத்தாகிவிட்டது. அடுத்த வழக்கு தவணைக்கு முன்னர் அது மீண்டும் கூடுவதற்கான வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. அப்படியாயின் வழக்கு வரும் 19ஆம் திகதி எடுபட்ட பின்னர் மேலும் குறைந்தது ஒரு தவணைக்காவது தள்ளிப் போவது தவிர்க்க முடியாததாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

\+ \+ \+

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய மகளிர் இல்லம் தொடர்பான ஆளுநர் தரப்பின் மேம்போக்கான அறிக்கை வந்துவிட்டது.

அது தொடர்பில் காட்டமான சில விடயங்களை கவனிக்க வேண்டியுள்ளது. அவற்றை நாளைய பத்தியில் பார்ப்போம்.

## கூட்டமைப்பில் மட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது விடயத்தில் நேற்றுப் பகல் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு கூட்டத்தில் தமிழரசு கட்சியின் 6 நாடாளுமன்ற உறுப்பினர்களும் எடுத்த நிலைப்பாட்டை நேற்றிரவு கூடிய தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு முழு அளவில் அங்கீகரித்து ஏற்றுக் கொண்டது.

நேற்றைய அரசியல் குழு கூட்டம் பற்றி நேரத்துடனேயே தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், நேற்றிரவு நிகழ்நிலை கூட்டம் ஆரம்பமான நேரத்தில் இருந்து பல தடவைகள் தொலைபேசி மூலம் அவருடன் தொடர்பு கொள்ள முயற்சி எடுக்கப்பட்டும் அது பலனளிக்கவில்லை என்று தெரிய வருகிறது. அவர் கூட்டத்தில் பங்கு பற்றவில்லை. மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராஜாவும் இக்கூட்டத்தில் பங்கு பற்றவில்லை.

கட்சியின் பொதுச்செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம், சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், குலநாயகம், குகதாசன், சுமந்திரன், சிறிதரன், கலையரசன், துரைராஜசிங்கம், சார்ள்ஸ் நிர்மலநாதன் போன்ற பலர் இக்கூட்டத்தில் பங்குபற்றினர் எனத் தெரிகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்லாத வேறு ஒரு கூட்டமைப்பில் அங்கம் பெற்றிருக்கின்ற ஒருவருக்கு தமிழரசுக் கட்சியின் பெயரிலான நாடாளுமன்றக் குழுவின் தலைமைப் பதவியை வழங்கக் கூடாது என்று உறுப்பினர்கள் அநேகமாக எல்லோரும் கருத்துத் தெரிவித்தனர்.

ஆயினும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பினின்றும் பிரிந்து, தனித்து உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவது என்ற முடிவை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு எடுத்திருந்ததால், அதனால் ஏற்பட்ட முரண்பாடுகளினால்இன்றையநிலைமை தோன்றியிருக்கின்றது என்பதைக் கூட்டத்தில் பங்குபற்றியவர்கள் சுட்டிக் காட்டினர். அந்தப் பின்னணியில் இந்த விடயத்தில் மத்திய குழுவின் கருத்தை அறிந்து, அதன் அடிப்படையில் இறுதித் தீர்மானத்தை எடுப்பது என நேற்றிரவு அரசியல் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாகவும் அறியவந்தது.

இதற்கிடையில் வரும் ஞாயிற்றுக் கிழமை 14ஆம் திகதி நடைபெற இருந்த தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் திகதி குறிப்பிடப்படாமல் தள்ளிப் போய் இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

## ஓர் உயிரைப் பலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடைபெற்ற சேவைகளில் மக்கள் முண்டியடித்தனர்.

இப்படி ரயிலில் பயணித்த ஒருவர் நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் பெம்முல்லே ரயில் நிலையத்துக்கருகில் ரயிலில் இருந்து கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

கடும் நெரிசலுக்கு மத்தியில் பாதுகாப்பற்ற வகையில் ரயிலில் பயணம் செய்த பயணி ஒருவரே இவ்வாறு ரயிலில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

கோட்டையிலிருந்து பொல்காவலை நோக்கிச்சென்றரயிலில் இருந்துவிழுந்தே இவர் உயிரிழந்தார் ர்னத் தெரிவிக்கப் படுகிறது.

## மீண்டும் சாவகச்சேரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அர்ச்சுனாவின் மீண்டும் அந்த ஆஸ்பத்திரியில் வந்து பணியாற்றும் நிலைமை வரும் என்றும் நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார்.

ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இந்த விடயங்களைக் கூறி இருக்கின்றார்.

அங்கு மூன்று மாடிக் கட்டடம் ஒன்றும் இருந்தும் கூட 14 வருடங்கள் சரிவர அந்த வளங்கள் பயன்படுத்தப்படாமல் இருந்துள்ளன.

இந்த நிலையில், வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவின் ஊடாக இவை வெளிக்கொண்டு வரப்பட்டபோது பொது மக்கள் தங்களது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தி வருகின்றனர் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சாவகச்சேரி வைத்தியசாலையில் நடைபெற்றவை தொடர்பில் தான் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்த விடயங்கள் அமைச்சரவையால் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன என்று தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்விடயங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு உயர்மட்டக் குழு ஒன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்திருப்பதாகவும் சொன்னார்.

மேலும், அந்த விசாரணைகள் முடிந்து வைத்தியர் அர்ச்சுனா மீண்டும் சாவகச்சேரி வைத்தியசாலையில் கடமையை பொறுப்பேற்பார் என்று தாம் நம்புகின்றார் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெளிவுபடுத்தினார்.

# பெருந்தலைவர் சம்பந்தன் அவர்களுக்குக் கண்ணீர் அஞ்சலி




Date: Saturday, July 13, 2024

Time: 4:30 - 8:00 pm

Venue: Malvern Family Resources Center
90 Littles Road, Scarborough (Sewells & Morningside)

திருகோணமலை மாவட்டத்தில் ஐந்துமுறை வென்ற மக்கள் பிரதிநிதி, இலங்கைத் தமிழரசு கட்சியின் மூத்த உறுப்பினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெருந்தலைவர், இலங்கை நாடாளுமன்றத்தில் மூன்றாண்டு காலம் ஆளுமை மிக்க எதிர்கட்சித் தலைவர், அரைநூற்றாண்டு காலமாக தமிழ் ஈழ அரசியலில் பேராளுமையாக விளங்கியவர் இராசவரோதயம் சம்பந்தன் ஐயா அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் பொதுக் கூட்டம்.

தேசத்தை நேசிப்போரின் அஞ்சலி உரைகள் இடம்பெறும்

கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
647-763-9410 / 416-281-1165 / 416-998-2284

கனடிய தமிழர் பேரவை
416-240-0078 / 647-300-1973

Build Your Dream Home with us....



NORTH WALL
ENGINEERING
"Experience a professional service like no other"

Our Services:
- Architectural Designing
- Structural Planning
- 2D & 3D Drawing
- BOQ Assessment
- Interior Designing
- Landscaping

For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766

Nelliyady, Jaffna.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## எவ்வழியில் ரெலோ - புளொட்?

'you can't have your cake and eat it (too)' - என்று ஆங்கில சொலவடை ஒன்று உண்டு. நீங்கள் உங்களிடம் இருக்கும் கேக்கைவைத்திருக்கவும்வேண்டும், அதை உண்ணவும் வேண்டும் என்று நினைத்தால் இரண்டும் ஒரே சமயத்தில் சாத்தியப்படாது என்பதுதான் அதன் அர்த்தம். 'கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை' என்ற பழமொழி கூறும் விடயம்தான்.

அதுபோன்றஒருவிவகாரத்தைத்தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்சார்பில்நாடாளுமன்றத்துக்கு தெரிவான ரெலோ உறுப்பினர்களுக்கு நேற்று நன்கு உணர்த்தி இருக்கின்றனர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆறு எம்பிக்களும்.

அதுவும் அறுவரும் ஒன்றுபட்டு நின்று உணர்த்தியிருக்கின்றமை முக்கிய விடயம்.

இது விடயத்தில் அவர்கள் தமக்குள் பிளவுபட்டு, கட்சியின் ஸ்திரத்தைக் கோட்டை விட்டுவிடுவர் என்ற ஆதங்கத்தில் நேற்று இப்பத்தியில் எச்சரிக்கப்பட்டு இருந்தது. ஆனால் தாங்கள், தங்கள் கட்சி நிலைப்பாட்டில் மிக உறுதியாக நிற்கின்றார்கள் என்று நேற்றைய கூட்ட நடவடிக்கை மூலம் அவர்கள் அறுவரும் தெளிவுபடுத்தி இருக்கின்றார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என்ற புதிய அமைப்பை உருவாக்கி, அதில் அரசியல் செய்து கொண்டிருக்கின்றன புளொட்டும் ரெலோவும்.

அதேசமயம், இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு தலைவர் பதவி காலியானதும் அதைக் கைப்பற்ற உரிமை கோரி ஓடி வருகின்றனர் அக்கட்சியினர்.

இது விநோதமான - விபரீதமான - உரிமை கோரல். தாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இல்லை, வேறு புதிய கூட்டணியில் இருக்கின்றோம், செயற்படுகின்றோம் என்று அறிவித்துக் கொண்டே, மறுபுறத்தில் கூட்டமைப்பு நாடாளுமன்ற குழுவின் தலைமையையும் கோருவது என்பது 'eat your cake and have it' என்ற கதைதான்.

புளொட்டும் ரெலோவும் மேற்படி இரண்டையும் ஒரே சமயத்தில் செய்ய முடியாது என்ற பாடத்தைத் தான் தமிழரசுக் கட்சி நேற்று நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் அந்த இரண்டு கட்சியினருக்கும் பாடம் எடுத்து போதித்து அனுப்பி இருக்கின்றது.

இனி, இவ்விடயத்தில் ரெலோ புளொட் அணிக்கு மூன்று மார்க்கங்கள்தான் இருக்கின்றன.

ஒன்று - தற்போதைய போக்குத் தொடர்வதற்குஅப்படியேவிட்டுவிட்டுப் பார்த்திருப்பது. சம்பந்தனுக்கு பதிலாக அவரின் பிரதிநிதியாக இந்த வேலையை முன்னெடுத்த சுமந்திரனே நாடாளுமன்றக் குழுத் தலைவராக - உத்தியோக ரீதியில் தேர்ந்தெடுக்கப்படாமலேயே - அந்தப் பணியைத் தொடர்ந்து செய்வதற்கு அனுமதித்துப் பார்த்திருப்பது.

இரண்டாவது - தமிழரசுக் கட்சியில் ஒருவரை நாடாளுமன்றக் குழுத் தலைவராக தெரிவு செய்ய ஒத்துழைத்து, அதனுடன் இணைந்து செயல்படுவது.

மூன்றாவது - அண்மையில்புளொட்டின் தலைவர் சித்தார்த்தன் சுட்டிக் காட்டிய அம்சம். கொள்கை, கோட்பாட்டு ரீதியாக தமிழரசும் மறுபுறத்தில் புளொட்டும் ரெலோவும் வெவ்வேறு அணியில் நிற்கின்றன. தமிழ்க் கூட்டமைப்பில்ஒன்றுபட்டுஇல்லை. இதுதான் யதார்த்தம். ஒரு கட்சியின் நாடாளுமன்றக் குழுவில் மூன்றில் ஒன்றுக்கு மேற்பட்ட பகுதியினர் தாங்கள் தனித்து வேறு அணியாக இயங்கப் போகின்றனர் என அறிவித்தால், சபாநாயகர் அதற்கு அங்கீகாரம்அளிக்கமுடியும். இப்போது கூட்டமைப்பின் 10 எம்.பிக்களில் நால்வர் புளொட் மற்றும் ரெலோவைச் சேர்ந்தவர்கள். அவர்கள் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவி தங்களுக்கு வழங்கப்படவில்லை என்ற ஆதங்கத்தில் தனிக் குழுவாக இயங்கப் போகின்றார்கள் என்று அறிவித்து, நால்வர் குழுவாக நாடாளுமன்றத்தில் இயங்க முடியும். அதற்குத் தனிக்குழு அங்கீகாரத்தை சபாநாயகர் வழங்கினால் அப்போது அக்குழுவின் தலைவராகவும் செல்வம் செயற்பட முடியும். அப்படி ஒரு நிலைமை ஏற்படுமானால் தமிழரசுக் கட்சியின் எஞ்சிய ஆறு எம்.பிக்களும் தனித்துத் தமிழரசு கட்சி என்ற குழுவாக இயங்கலாம்.

இதில் எந்த வழியை ரெலோவும் புளொட்டும் எடுக்கப் போகின்றன என்பதில்தான் அவற்றினது எதிர்காலமும் தங்கியுள்ளது.

# நீட் தேர்வினை உடனடியாக இரத்து செய்ய வேண்டும்

## அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தல்



"நீட் தேர்வை மத்திய அரசு நிரந்தரமாக இரத்து செய்ய வேண்டும்" என பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"நீட் தேர்வில் வினாத்தாள் கசிவு, சட்டவிரோதமாக கருணை மதிப்பெண்கள் வழங்கப்பட்டமை, ஆள்மாறாட்டம் உள்ளிட்ட முறைகேடுகள் நடைபெற்றதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

அவை தொடர்பாக தொடரப்பட்ட வழக்குகளை விசாரித்த உச்சநீதிமன்றம், பெரிய அளவில் முறைகேடுகள் நடந்தது உறுதி செய்யப்படும் பட்சத்தில் நீட் தேர்வு ரத்து செய்யப்படும் என்று எச்சரித்துள்ளது.

அதன் காரணமாகவே மருத்துவ மாணவர் சேர்க்கை கலந்தாய்வுகளை மத்திய, மாநில அரசுகள் நிறுத்தி வைத்துள்ளன.

இத்தகைய சூழலில் மதிப்பெண்கள் அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடத்தப்படுவது எந்த வகையில் நியாயம்? மருத்துவ மாணவர் சேர்க்கைக்கு தனியார் பல்கலைக்கழகங்களின் சார்பில் பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நீட் தேர்வில் 500 மதிப்பெண்கள் எடுத்தாலும் கூட பணம் இல்லாத மாணவர்களால் தனியார் பல்கலைக்கழகங்களில் ஆண்டுக்கு ரூ.25 லட்சம் வரை கட்டணம் செலுத்தி சேர முடியாது.

அதே நேரத்தில் மதிப்பெண் குறைவாக எடுத்திருந்தாலும் பணம் இருந்தால் மருத்துவப் படிப்பில் சேர முடியும். இந்தத் தத்துவத்தின் அடிப்படையில் தான் தனியார் கல்லூரிகளை அணுகும் மாணவர்களுக்கு பல்கலைக்கழகங்கள் இடம் ஒதுக்குகின்றன.

ஆகவே மருத்துவக் கல்வி வணிகமயமாக்குவதை ஊக்குவிக்கும் நீட் தேர்வு இனியும் தொடரக்கூடாது. எனவே, நீட் தேர்வை மத்திய அரசு நிரந்தரமாக இரத்து செய்ய வேண்டும்." - என்று வலியுறுத்தியுள்ளார்.

# இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்தப்படவிருந்த கஞ்சா பறிமுதல்

## ஐவர் கைது

தமிழ்நாடு காரைக்குடி வழியாக இலங்கைக்கு கடத்த முயன்ற 124 கிலோ கஞ்சா பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி கஞ்சா ஆந்திர மாநிலம் விஜயவாடா பகுதியில் இருந்து காரைக்குடிக்கு கடத்தி வரப்பட்டதாகவும் காரைக்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காரைக்குடி பொலிஸ் உதவி ஆய்வாளர் சுற்றுக் காவல் பணியில் ஈடுபட்டிருந்தபோது ஓரிடத்தில் கார் ஒன்று சந்தேகத்திற்கிடமான முறையில் நின்று கொண்டிருந்த நிலையில் அதன் அருகே நின்றிருந்த மூன்று பேர் பொலிஸாரை கண்டதும் காரில் ஓட்டம்பிடித்துள்ளனர்.

எனினும் சமயபுரம் அருகே உள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் அந்தக் கார் தடுத்து நிறுத்தப்பட்டு அதில் இருந்த 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், விசாரணையின் போது தங்களிடம் ஒப்படைக்கப்படும் கஞ்சாவை உரிய இடத்தில் சேர்த்தால் ரூபா முப்பதாயிரம் கிடைக்கும் என்றும் அதற்காக கஞ்சா கடத்தலில் ஈடுபட்டதாகவும் கைதானவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.





# ஏடன் வளைகுடாவில் அதிகரிக்கும் பதற்றம்

## சரக்கு கப்பலை இலக்கு வைத்த ஹவுதி கிளர்ச்சியாளர்கள்

அரபிக்கடலின் ஏடன் வளைகுடா பகுதியில் ஏமனின் நிஷ்டன் கடற்பகுதியில் சென்றுகொண்டிருந்த சரக்கு கப்பலை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நேற்று முன்தினம் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தத் தாக்குதலினால் சரக்கு கப்பலுக்கும் கப்பலில் இருந்த மாலுமிகள் யாருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது ஏவுகணை கப்பலுக்கு மிக அருகே கடலில் விழுந்துள்ளதாக கூறப்படுகிறது.

அதேவேளை, சரக்கு கப்பல் எந்த நாட்டை சேர்ந்தது. கப்பலில் எத்தனை மாலுமிகள் பயணித்தனர் போன்ற விவரம் இதுவரை வெளியாகவில்லை.

இஸ்ரேல் ஹமாஸ் இடையேயான போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களும், லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா அமைப்பினரும் ஆதரவு அளித்து வருகின்றனர்.

இந்த நிலையில் ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவு அளிக்கும் வகையிலும், இஸ்ரேலுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் அரபிக்கடல், செங்கடலில் செல்லும் சரக்கு கப்பல்களை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி சிறைபிடிக்கும் செயலிலும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ட்ரம்ப்பை கடுமையாக விமர்சித்தார் கமலா ஹரிஷ்



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஒரு போராளி எனவும் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஒரு சர்வாதிகாரி எனவும் அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹறிஷ் தெரிவித்துள்ளார்.

லாஸ்வேகாஸில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் அமெரிக்காவின் வரலாற்றில் மிக முக்கியமான தேர்தல் எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது எளிதான விடயம் அல்ல எனவும் டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனநாயகத்தையும் சர்வாதிகார நாடாக மாற்றி விடுவார் எனவும் கமலா ஹறிஸ் விமர்சித்துள்ளார்.

அதேவேளை, ட்ரம்ப் மீண்டும் ஜனாதிபதியாக வந்தால் ஒவ்வொரு மாநிலத்திலும் கருக்கலைப்பை தடை செய்யும் தேசிய கருக்கலைப்பு தடையில் கையெழுத்திடுவார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், அவரின் ஆட்சியில் நாட்டின் சமூக பாதுகாப்பு பெரிதும் பாதிக்கப்படும் எனவும் கமலா ஹறிஸ் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் ஜோ பைடனும், குடியரசு கட்சி சார்பில் டொனால்ட் ட்ரம்ப்பும் போட்டியிடவுள்ள நிலையிலேயே கமலா ஹறிஸ் ட்ரம்ப் மீது இந்த விமர்சனத்தை முன்வைத்துள்ளார்.

# 16 வகை பூச்சிகளை உண்பதற்கு அனுமதியளித்தது சிங்கப்பூர் அரசு

பூச்சிகளை மனிதர்கள் உணவாக உட்கொள்ள சிங்கப்பூர் அரசு அனுமதி வழங்கியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வெட்டுக்கிளிகள், பட்டுப்புழுக்கள், புழுக்கள் உள்ளிட்ட 16 பூச்சியினங்களை மனிதர்கள் உட்கொள்வதற்கு சிங்கப்பூரில் உள்ள உணவுக் கழகம் ஒப்புதல் அளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், இந்த உணவுகள் சீன மற்றும் இந்திய உணவுகள் உட்பட உலகளாவிய உணவுகளின் சர்வதேச புகழ்பெற்ற மெனுவில் சேர்க்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.



மேலும், 30 வயதுக்கு உட்பட்ட இளைஞர்களே அதிக தைரியத்துடனும் மற்றும் ஆர்வத்துடனும் முன்வந்து இந்த வகை உணவுகளை வாங்கிச் சாப்பிடுகின்றனர் என உணவக உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.






# பொருளாதார, அரசியல் முறைமைகளை கட்டியெழுப்ப மகா சங்கத்தினரின் வழிகாட்டல் மிகவும் முக்கியமானது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“தேரவாத பௌத்த நாடுகள் அனைத்தும் ஏற்றுமதிப் பொருளாதாரத்தின் அடிப்படையில் முன்னேற்றமடைந்துள்ளன. இறக்குமதிப் பொருளாதார முறையைப் பின்பற்றி இலங்கை மட்டுமே வங்குரோத்து நிலைக்குச் சென்றுள்ளது. எனவே, நாட்டில் புதிய பொருளாதார, அரசியல் முறைமைகள் விரைவில் உருவாக்கப்பட வேண்டும். நாட்டை புதிய பாதைக்கு கொண்டு செல்வதற்கு மகா சங்கத்தினரின் வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் மிகவும் முக்கியமானது.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

காலி கரந்தெனிய சிறி அபயதிஸ்ஸ பிரிவெனாவில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற அமரபுர மகா நிக்காய – ஆரியவன்ச சத்தம்ம பீடத்தின் 44 ஆவது உபசம்பதா நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமரபுர மகா நிகாய – ஆரியவன்ச சத்தம்ம பீடத்தின் உபசம்பத நிகழ்வுகள் இலங்கை அமரபுர நிகாயாவின் மகாநாயக்க தேரர் வண. கரகொட உயங்கொட மைத்திரி மூர்த்தி மகாநாயக்க தேரர் தலைமையில் இன்று முதல் ஜுலை 14 ஆம் திகதி வரை நடைபெறவிருப்பதோடு 98 பேர் இதன்போது துறவறத்தை ஏற்றுக்கொள்ளவுள்ளனர்.

600 இற்கும் மேற்பட்ட விகாரைகளில் இருக்கும் 4000 இற்கும் மேற்பட்ட பிக்குகள் அமரபுர ஆரியவன்ச சத்தம்ம பீடத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதோடு, இரு வருடங்களுக்கு ஒரு முறை உபசம்பதா நிகழ்வு நடத்தப்படும்.

காலி கரந்தெனிய சிறி அபயதிஸ்ஸ பரிவேனாவின் அதிபதி வண கினிகல பெதெஸ சுதம்ம தேரர், உபசம்பதா நிகழ்விற்காக வெளியிடப்பட்ட நினைவுப் புத்தகத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

“துறவற வரலாற்றில் உபசம்பத நிகழ்வு முக்கியமானதாகும். அந்த விழாவின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டே முன்பிருந்தே இதற்காக அரச அனுசரணை வழங்கப்படுகிறது. இன்றைய உபசம்பதா நிகழ்வும் அரசாங்க அனுசரணையுடன் நடைபெறுகிறது.

இலங்கையில் உபசம்பதா நிகழ்வு இல்லாத காலமும் இருந்தது. அப்போது, பிக்குகளின் தலையீட்டுடன் சியம் நிக்காயவில் முதலாவது உபசம்பதா நிகழ்வு அரச அனுசரணையுடன் நடத்தப்பட்டது.

மீண்டும் அந்த முறைமை இல்லாது போயிருந்த வேளையில் மியன்மாரின் உதவியுடன் அமரபுர நிக்காயவில் ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து அரச அனுசரணையுடன் இந்த நிகழ்வு இடம்பெற்று வருகிறது. ஆங்கிலேயர் தென் பகுதிகளை ஆட்சி செய்த காலத்தில் துறவறத்தையும் சாசனத்தையும் பேணிக்காக்க ஆற்றிய சேவை அளப்பரியது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன், இந்த நாட்டின் பொருளாதாரம் சரிந்தது. நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்றது. நீண்டகாலமாக பேணப்பட்ட இறக்குமதி பொருளாதாரக் கொள்கையினால் அந்த நிலைமையை நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் மற்றைய அனைத்து தேரவாத பௌத்த நாடுகளும் ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நகர்ந்தன.

எனவே, நாட்டில் புதிய பொருளாதார, அரசியல் முறைமைகள் விரைவில் உருவாக்கப்பட வேண்டும். நாட்டை புதிய பாதைக்கு கொண்டு செல்வதற்கு மகா சங்கத்தினரின் வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் மிகவும் முக்கியமானது.” – என்றார்.






# ஆளுநரின் அறிவுறுத்தல்கள் தொடர்பான திரிப்புகளுக்கு ஆளுநர் பொறுப்புக் கூற முடியாது என்கிறது அவர் தரப்பு

## சிறுவர் மற்றும் மகளிர் இல்லங்கள் தொடர்பில் நேற்றைய அறிக்கை



வடக்கு ஆளுநரின் அறிவுறுத்தல்களில் இருந்து மாறுபட்ட வகையில் சில ஊடகங்களும் சமூகவலைத் தளங்களும் வெளியிடும் செய்திகளுக்கு ஆளுநர் பொறுப்புக்கூற முடியாது என்பதை ஆளுநர் அலுவகம் தெளிவுபடுத்தியிருக்கின்றது.

இது தொடர்பில் வடக்கு ஆளுநர் அலுவலகம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை பகுதியில் இயங்கும் சிறுவர் மற்றும் மகளிர் இல்லங்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையிலும், பிரதேச செயலாளரின் விசாரணைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட கள விசாரணை அறிக்கைக்கு அமைவாகவும், துறைசார் திணைக்கள ஆணையாளருக்கு கௌரவ ஆளுநரினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக ஆளுநரினால் நியமிக்கப்பட்ட விசேட விசாரணைக் குழு மீண்டும் களவிஜயம் மேற்கொண்டு ஆளுநருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கையின் பிரகாரம் சம்பந்தப்பட்ட இல்லம் ஒன்றில் கண்டறியப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் பற்றிய அறிவுறுத்தல்கள் உரிய திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

வட மாகாணத்துக்குள் இயங்கும் அனைத்து சிறுவர் இல்லங்களும் உரிய ஒழுங்கு விதிகள் மற்றும் சட்டவரையறைகளைப் பின்பற்றி இயங்குவதை உறுதிப்படுத்தும் விதமான அறிவுறுத்தல் ஆளுநரால் தொடர்புடைய அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆளுநரின் அறிவுறுத்தல்களில் இருந்து மாறுபட்ட வகையில் சில ஊடகங்களும் சமூகவலைத் தளங்களும் வெளியிடும் செய்திகளுக்கு நாம் பொறுப்புக்கூற முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் எமது அறிவிப்புகளை றறற.வி.பழள.டம என்ற வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தின் ஊடாகப் பார்வையிட முடியும். – என்று உள்ளது.

# ஒற்றுமையின் அடிப்படையில் செல்வத்தை தெரிவு செய்தால் ஒன்றுபட வாய்ப்பாகும்!

## நேற்று நாடாளுமன்றக் குழுக் கூட்டத்துக்கு முன் யாழில் மாவை கருத்து

நாடாளுமன்றக் குழுத் தலைவர் பொறுப்புக்கு இதுவரையில் செல்வம் அடைக்கலநாதனை நியமிப்பதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. இணக்கத்தின் அடிப்படையில் அப்படித் தெரிவு செய்தால் எதிர்காலத்தில் எல்லோரும் ஒன்றுபட்டு செயற்படுவதற்கும் அது வழியாக இருக்கும்.

– இவ்வாறு தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழிலுள்ள தலைமை அலுவலகத்தில் நேற்றுப் பகல் தாம் நடாத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

தமிழரசு கட்சியின் வீட்டு சின்னத்தில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இருக்கின்றார்கள்.

அதில் ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டிய பொறுப்பு எங்களுக்கும் இருக்கின்றது. இன்றைய சூழ்நிலையிலே எங்கள் உறுப்பினர்களிடையே ஒற்றுமை ஏற்பட வேண்டும். இணக்கம் ஏற்பட வேண்டும். அந்த இணக்கத்தின் அடிப்படையிலே ஒரு தலைவரைத் தெரிவு செய்ய வேண்டும்.

அந்தப் பொறுப்புக்கு இதுவரையில் செல்வம் அடைக்கலநாதனை நியமிப்பதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

இணக்கத்தின் அடிப்படையில் அப்படித் தெரிவு செய்தால் எதிர்காலத்தில் எல்லோரும் ஒன்றுபட்டு செயற்படுவதற்கும் அது வழியாக இருக்கும் என்ற கருத்தும் எங்கள் தரப்பிலே சொல்லப்பட்டிருக்கின்றது.

நாடாளுமன்றக் குழுத் தலைவர் விவகாரடம் தொடர்பாக ரெலோவின் தலைவரும் செயலாளரும் என்னிடமே நேரடியாக பேசியிருக்கின்றார்கள்.

அவ்வாறு செல்வம் அடைக்கலநாதனின் விருப்பம் தொடர்பில் முதலில் நாடாளுமன்றக் குழு பேசி தீர்மானம் எடுக்க வேண்டும்.



இந்த விடயத்திலே முதலாவதாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற எங்களது கூட்டமைப்பைச் சேர்ந்த உறுப்பினரகள் ஒருமித்த நிலைப்பட்டை எடுக்க வேண்டும்.

அவ்வாறு இணக்கத்தின் அடிப்படையில் நாடாளுமன்றத்தில் உள்ளவர்கள் ஒன்றுகூடி தெரிவு செய்ய வேண்டுமென நாங்கள் ஆலோசனை கூறியிருக்கிறோம்.

அதனடிப்படையில் எல்லோரும் ஒற்றுமையாக ஒரு தீர்மானத்தை எடுப்பார்களாக இருந்தால் சிறந்தொரு தீர்மானமாக அது அமையும்.

இன்றைய கால கட்டத்தில் தமிழ் மக்களும் எங்களுடைய கட்சிகளும் எந்தக் காரணங்களுக்காகவும் பிளவுக்கும் பிரிவுக்கும் குழப்பங்களுக்கு இடமளிக்காமல் ஒற்றுமையாக ஒரு தீர்மானத்தை அவர்கள் எடுக்க வேண்டுமென – அவ்வாறு பொருத்தமான இணக்கமான தீர்மானத்தை எடுக்க வேண்டுமென – கேட்டிருக்கிறோம். – என்றார்.



# மன்னாரில் இருந்து கொழும்புக்கு கூலர் வாகனத்தில் கடத்தப்பட்ட 28 கிலோ கஞ்சா வவுனியாவில் சிக்கியது

(கே.வசந்தன்)

மன்னார், பேசாலை பகுதியிலிருந்து கொழும்பு நோக்கி கடத்தப்பட்ட 28 கிலோ 760 கிராம் கேரளா கஞ்சா வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. கடத்தப் பயன்படுத்தப்பட்ட கூலர் வாகனத்துடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:–

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெயக்கொடியின் அறிவுறுத்தலின் நிமித்தம் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ன்ஸ்பெக்டர் ரிஸ்வி தலையிலான குழுவினரே இந்த நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர்.

மன்னார், பேசாலை பகுதியிலிருந்து கூலர் ரக வாகனம் ஒன்றில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டு கொழும்பு நோக்கிக் கஞ்சா கடத்தப்பட்டபோதே பொலிஸார் அதனைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்நடவடிக்கையின் போது கூலர் ரக வாகனத்தையும் பொலிஸார் மீட்டுள்ளமையுடன், சந்தேக நபர்களாக பேசாலை பகுதியை சேர்ந்த 27 மற்றும் 30 வயதுடைய இரண்டு இளைஞர்களையும் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசராணைகளின் பின்னர் கைது செய்யப்பட்டவர்களை வவுனியா நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உள்ளனர் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.













# ஸ்மார்ட் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் ஸ்மார்ட் கொள்கையொன்று இருப்பது கட்டாயம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தல்

ஸ்மார்ட் நாடு கட்டியெழுப்பப்பட வேண்டுமானால், ஸ்மார்ட் கொள்கைகளை முன்னெடுக்க வேண்டும். உலகில் நொடிக்கு நொடி நிகழும் தொழில்நுட்ப மாற்றங்கள் குறித்த தரவுகள் பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும். வகுப்பறைக்குள் மட்டுப்படுத்தப்பட்ட கல்வியை விட உலகை வெற்றி கொள்ளும் திறந்த கல்வி முறை உருவாக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தனியார் கல்விக்கும் இலவசக் கல்விக்கும் இடையிலான வேறுபாடுகளை களைவோம. என்றும் அவர் கூறினார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 305 ஆவது கட்டமாக 11 லட்சத்து 77 ஆயிரம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள் என்பன கெஸ்பேவ, மடபாத, படுவந்தர கனிஷ்ட வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று ஜுலை 10 ஆம் திகதி இடம்பெற்றது.இதன்போது, பாடசாலை அபிவிருத்தி நிதியத்திற்கு ஒரு லட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இனம், மதம், சாதி, வர்க்கம், கட்சி வேறுபாடுகள் இன்றி, அவற்றை ஒதுக்கி வைத்துவிட்டு, தேசிய நோக்கத்தோடும், முன்னுரிமையோடும் ஸ்மார்ட் நாட்டைக் கட்டியெழுப்ப சகலரும் முன்வர வேண்டும். அறிவை மையமாகக் கொண்ட பயணமும் பொருளாதாரமும் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்காகவும், அவர்களின் எதிர்காலத்திற்காகவும் இயன்றவரை தம்மை அர்ப்பணித்து செயல்பட வேண்டும். பிள்ளைகளுக்குச் சாதகமான சூழலை உருவாக்கி, அவர்கள் கல்வியில் முன்னேறுவதற்கான



பரந்த வழியை திறந்து விட வேண்டும். சிறந்த அறிவொளியும், ஒழுக்கமும் கொண்ட நாகரிக குடிமக்கள் தலைமுறையை உருவாக்க பிள்ளைகளும் தமது பங்களிப்பை வழங்க வேண்டும். இதற்குத் தேவையான ஸ்மார்ட் கல்வி தேசியக் கொள்கையாக வகுக்கப்படும். இதற்குப் பங்களிக்கும் கல்வித்துறையில் பணியாற்றிவரும் 7 முக்கிய மனிதவளப் பிரிவினரையும் பாதுகாப்போம்.

தகவல் தொழில்நுட்பப் புரட்சியை மக்கள் மத்தியில் யதார்த்தமான ஒன்றாக புழக்கப்படுத்த வேண்டும். பிள்ளைகளுக்கு ஸ்மார்ட் சாதனத்திற்கான அணுகலை வழங்க வேண்டும். இதன் மூலம் இணையம் மூலம் புதிய அறிவைப் பெறும், புதிய தொழிநுட்ப முறைகள் மூலம் கற்கும் சூழல் உருவாகும். கல்வியே முதன்மையானது. இதுவே ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கையாகும். கல்விக்கு நாம் அதிக முதலீடுகளைச் செய்வோம். தனியார் கல்விக்கும் இலவசக் கல்விக்கும் இடையிலான வேறுபாடுகளை நாம் களைவோம். - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார்.








# அகால மரணமடைந்த இளம் குருவின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது

## ஆயிரக்கணக்கான மக்கள் இறுதி அஞ்சலி

(வாஸ் கூஞ்ஞ)

ஞாயிற்றுக்கிழமை இரவு அகால மரணமடைந்த மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த மன்னார் மறைமாவட்ட மடுமாதா சிறிய குருமட உதவி அதிபர் அருட்பணி கீ.ஜொனாத்தன் கூஞ்ஞ (வயது 31) அவர்களின் நல்லடக்கம் செவ்வாய் கிழமை பிற்பகல் மன்னார் பொது சேமக்காலையில் சமய தலைவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் இடம்பெற்றது.

திங்கள் கிழமை மன்னார் ஆயர் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த இவரின் பூதவுடல் செவ்வாய்கிழமை காலை தொடக்கம் மாலை வரை பொது மக்களின் அஞ்சலிக்காக மன்னார் பேராலயத்தில் வைக்கப்பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து அன்றைய தினம் மாலை 3 மணிக்கு மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் இரங்கல் கூட்டுத் திருப்பலியுடன் இறுதி யாத்திரை சடங்குகளுடன் அமரர் கீ.ஜொனாத்தன் அடிகளாரின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவரின் பூதவுடலுக்கு பல ஆயிரக்கணக்கான மக்களும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் , பொலிஸ், இராணுவத் தலைவர்கள், பாடசாலை மாணவர்கள், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் உட்பட பல முக்கியஸ்தர்கள் அஞ்சலி செலுத்தினர்.



















# டோஹா - கொழும்பு இடையிலான விமான சேவைகள் அதிகரித்தன




கட்டாரின் டோஹாவில் இருந்து கொழும்புக்கான விமான சேவையை நேற்று முதல் அதிகரிக்க கட்டார் ஏர்வேஸ் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, தினசரி விமான சேவைகள் 5 அல்லது 6 ஆக அதிகரிக்கப்படும் என அந்த விமான நிறுவனம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

கட்டார் ஏர்வேஸ் உலகளாவிய ரீதியில் சுமார் 170 விமான நிலையங்களுக்குத் தமது சேவையை முன்னெடுக்கிறது.

இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு அந்த நிறுவனம் வாராந்தம் 42 விமான சேவைகளை முன்னெடுத்து வருகிறது.



# பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம் எனக் கவனவீர்ப்பு

## மூதூர் தங்கநகர் பகுதியில் நேற்று நடந்தது

**(ஹஸ்பர் ஏ.ஹலிம், கீத பொன்கலன்)**

திருகோணமலை மூதூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தங்கநகர் பகுதியில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்க கோரிய கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று இடம் பெற்றது.

இதனை கிளிவெட்டி தங்க நகர் பகுதி சமூக மட்ட அமைப்புக்கள் பொது மக்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

அண்மையில் நடேஸ் குமார் வினோதி எனும் யுவதி கொலை செய்யப்பட்டுக் கிணற்றினுள் சடலமாக மீட்கப்பட்டார். இதனை கண்டித்து அப்பகுதியினர் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.



இந்தக் கொலையை மேற்கொண்டவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும், பிணை வழங்கப்படக் கூடாது போன்ற விடயங்களை முன்வைத்து பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

சம்பந்தப்பட்ட கொலையின் பிரதான சந்தேகநபரின் இல்லத்துக்கு அருகே இந்தப் போராட்டம் நடைபெற்றது.










# பணிப்பகிஷ்கரிப்பைத் தொடர ரயில் நிலைய அதிபர்கள் முடிவு

தமது பணிப்பகிஷ்கரிப்பை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு ரயில் நிலைய அதிபர்கள் தீர்மானித்துள்ளனர்.

தமது பிரச்சினைக்கான தீர்வு கிடைக்காததால் தொழிற்சங்க நடவடிக்கையை தொடர்ந்தும் முன்னெடுப்பதாக ரயில் நிலைய அதிபர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

ரயில் நிலைய அதிபர்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுப்பட்டுள்ளனர்.

5 வருடங்களுக்கு ஒருமுறை வழங்கப்படும் பதவியுயர்வு வழங்கப்படாமை உள்ளிட்ட பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி இந்த வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்படுகின்றது.

நேற்று நண்பகல் 12 மணிக்கு பணிக்கு சமுகமளிக்காத ஊழியர்கள் அனைவரும் சேவையில் இருந்து விலகியதைப் போன்று கருதப்படுவார்கள் என ரயில்வே பொது முகாமையாளர் அறிவித்த பின்னணியிலேயே ரயில் நிலைய அதிபர்கள் உள்ளிட்ட ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இந்த பணிப்பகிஷ்கரிப்பினால் பய ணிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.



# ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இன்று நாடாளுமன்றில் விவாதம்

ஜனாதிபதி தேர்தலை உரிய காலப்பகுதியில் நடத்துவதன் தேவை தொடர்பில் நாடாளுமன்ற விவாதமொன்றை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் இன்று ஒத்திவைப்பு விவாதத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க மற்றும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரிஎல்ல ஆகியோரால் கூட்டாக முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைய இந்த ஒத்திவைப்பு வேளை விவாதம் நடத்தப்படவுள்ளதாக நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

இன்று வாய்மூல விடைக்கான வினாக்களை தொடர்ந்து, காலை 10.30 முதல் மாலை 5.30 வரை விவாதத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பு மற்றும் ஏனைய தொடர்புடைய சட்டங்களின் ஏற்பாடுகளுக்கமைய 2024 செப்டம்பர் 17 முதல் ஒக்டோபர் 16 வரையான காலப்பகுதியினுள் ஜனாதிபதி தேர்தலை நடத்துவது தொடர்பிலேயே இந்த விவாதம் இடம்பெறவுள்ளதாக நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனிடையே, அரசாங்கம் பல்வேறு சூழ்ச்சிகளின் ஊடாக ஜனாதிபதியின் பதவிக்காலத்தை ஒருவருடத்தினால் நீடிப்பதற்கு முயற்சியை மேற்கொண்டுள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரிஎல்ல தெரிவித்துள்ளார்.எதிர்வரும் 2 வாரங்களுக்குள் இந்த விடயம் தொடர்பில் பல்வேறு சட்டமூலங் களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

இதன் காரணமாக உரிய காலப்பகுதியில், உரிய நாளில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு செய்தியொன்றை வழங்குவதற்காகவே இந்த விவாதம் கோரப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.




# ஐந்து தேர்தல்களுக்கு போதுமான எழுதுபொருள்கள் கைவசமுள்ளன

## அரச அச்சகர் தெரிவிப்பு

ஐந்து தேர்தல்களுக்கு போதுமான எழுதுபொருள்கள் அரச அச்சகத்தின் வசமிருக்கின்றன என அரச அச்சகர் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போது அவர் இதனை கூறியுள்ளார்.

பொலிஸ்மா அதிபர் மற்றும் தபால்மா அதிபர் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த தேர்தல்களை விட இம்முறை அச்சிடும் செலவு 4 மடங்கு அதிகரிக்கும் என அரசாங்க அச்சகர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி தேர்தலில் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதிலிருந்து தேர்தல் முடியும் வரை அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும் என பொலிஸ்மா அதிபர் இந்த கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

இதனிடையே உத்தியோகபூர்வ வாக்குச்சீட்டு விநியோகம் உட்பட ஜனாதிபதி தேர்தல் தொடர்பான சகல நடவடிக்கைகளையும் தடையின்றி மேற்கொள்வதாக தபால் மா அதிபர் உறுதியளித்துள்ளார் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம். எல்.ரத்நாயக்க கூறியுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுக்கள் உள்ளிட்ட ஆவணங்களை அச்சிடும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அரச அச்சகர் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தலுக்கான திகதியை அறிவிப்பதற்கான அதிகாரம் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு பின்னர் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கும்.

அதற்கமைய, இம்மாத இறுதிக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் திகதியை அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியின் பதவிக்காலம்;

# அரசமைப்புக் குழப்பத்தைத் தீர்க்க திருத்தச் சட்ட மூலம் வருகின்றது!

## அதைத் தயாரிக்க அமைச்சரவை அனுமதி

ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் அரசமைப்பின் இரு சரத்துகளில் குறிப்பிடப்பட்டுள்ள வருடங்களின் எண்ணிக்கையை திருத்தியமைப்பதற்காக அரசமைப்புத் திருத்தச் சட்டமூலமொன்றைத் தயாரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த யோசனை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நேற்று முன்தினம் முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 30 (2) சரத்தில் ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 62 (2) சரத்திற்கமைய, நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் 5 வருடங்களாகும்.

எனினும் அரசமைப்பின் 83 (ஆ) சரத்தில் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் 6 வருடங்களைவிட அதிகமாக நீடிக்கப்படுமாயின், அதற்காக முன்வைக்கப்படும் சட்டமூலத்திற்காக சர்வஜன வாக்கெடுப்பு அவசியமென குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சரத்துகள் யாவற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்காலத்தை 5 வருடங்களாக மாற்றுவதற்கு, உரிய சட்டமூலத்தை முன்வைப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# அத்தியாவசிய பொருள்கள் சிலவற்றின் விலை குறைப்பு

லங்கா சதொச நிறுவனம் அத்தியாவசிய பொருள்கள் சிலவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன என அறிவித்துள்ளது.

அதற்கமைய, பாசிப்பயறு 1 கிலோகிராம் 998 ரூபாவாகவும், இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு 1 கிலோகிராம் 205 ரூபாவாகவும், சிவப்பு சீனி 1 கிலோகிராம் 375 ரூபாவாகவும் மற்றும் வெள்ளைச் சீனி 1 கிலோகிராம் 263 ரூபாவாகவும் விலை குறைக்கப்பட்டுள்ளது.

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் பணிப்புரைக்கு அமைய இந்த விலை குறைப்பை மேற்கொண்டுள்ளதுடன், நுகர்வோர்நேற்று முதல் புதிய விலையில் பொருள்களை கொள்வனவு செய்ய சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

LANKA Sathosa
ලංකා සතොස லங்கா சதொச




# நாடாளுமன்றம் அருகே ஆர்ப்பாட்டம் செய்த அதிபர்களைத் தேடிச் சென்று சந்தித்த சஜித்!

## அவர்களின் பிரச்சினைகளை சபையில் எழுப்பினார்

நேற்றைய தினம் நாடாளுமன்றத்திற்கு அருகில் உள்ள பொல்துவ சந்தியில் அமைதியான முறையில் அதிபர்கள் இணைந்து முன்னெடுத்து வந்த ஆர்ப்பாட்டத்தின் போது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அந்த இடத்திற்குச் சென்று அவர்களைச் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்துக் கேட்டறிந்தார்.

இந்தப் பிரச்சினைகள் குறித்து நேற்றே நாடாளுமன்றத்தில் தாம் பிரஸ்தாபிப்பார் என்று அங்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அவர்களுக்கு வாக்குறுதியளித்தார். இதன் பிரகாரம், நேற்று பாராளுமன்றம் கூடிய போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இந்தப் பிரச்சினைகளை சபையில் முன்வைத்தார்.

இங்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா கூறியவை வருமாறு:-

"தற்போது, பொல்துவ சந்தியில் அதிபர்களால் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது. எமது நாட்டில் 12,000 முதல் 13,000 அதிபர்கள் உள்ளனர். இவர்களது சம்பள முரண்பாடுகள், பிரதான கொடுப்பனவுகள், தொடர்பாடல் கொடுப்பனவுகள் மற்றும் பயண கொடுப்பனவுகள் தொடர்பான பிரச்சினைகளை முன்வைத்தே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இலங்கை அதிபர் சேவையின் தரம் ஐஐ இலிருந்து தரம் ஐ இற்கு பதவி உயர்வு பெறும் போது அவர்களின் சம்பளம் ரூ.3,000 முதல் 6,000 வரை வெட்டப்படுகிறது.

அதிபர் சேவையை நிறைவேற்றுத் தர சேவையாக கருதப்பட்டாலும், அவர்களுக்கு எந்த சேவை வசதிகளும் கிடைப்பதில்லை. எந்த கொடுப்பனவுகளையும் அவர்கள் பெறுவதில்லை. தற்போது இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் அது உபகுழுவில் முடங்கிப்போயுள்ளது. எனவே அந்த அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்து அரசாங்கம் கூடிய விரைவில் தீர்வைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதிபர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் எமது நாட்டின் கல்வி முறை வீழ்ச்சியடையும். இவ்விடயத்தில் கல்வி அமைச்சர் தலையிட்டு அவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன். தங்களின் அடிப்படைச் சம்பளம் வெட்டப்பட்டால், இங்கு முறைமையில் பிழை காணப்படுகிறது. எனவே இந்தப் பிரச்சினைகளை முறையாக ஆராய்ந்து தீர்வுகளை வழங்குமாறும் கோரிக்கை விடுக்கிறேன். - எனத் தெரிவித்தார்.













# சுங்கப் பணியாளரின் போராட்டத்தால் பொருள்களின் விலைகள் மீள உயரும்?

பொருள்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கும் சாத்தியங்கள் காணப் படுகின்றன என சுங்கத் திணைக் களத்தின் விடுவிப்பு அலுவலர்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியா கியுள்ளன.

அண்மையில் சுங்கத் திணைக் களத்தைச் சேர்ந்த பணியாளர்கள் சுகவீனப் போராட்டம் ஒன்றை முன்னெ டுத்திருந்தனர்.

இதனால் துறைமுகங்களில் தேங் கிக்கிடந்த பொருள்களை மேற்பார்வை செய்து விடுவிப்பதில் தாமதம் ஏற்பட் டிருந்தது. அதன் காரணமாக எதிர்வரும் நாள்க ளில் பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டு பொருள்களின் விலைகள் அதிகரிக்கும் சாத்தியங்கள் இருக்கின்றன என தெரி விக்கப்பட்டுள்ளது.

# அத்துருகிரிய கொலைச் சம்பவத்தில் கைதான 7 பேருக்கும் விளக்கமறியல்

அத்துருகிரியவில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 7 பேரும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துருகிரிய சந்தியில் பச்சை குத்தும் நிலையத்தில் கிளப் வசந்த என்ற சுரேந்திர வசந்த பெரேரா என்பவ ரைக் கொலை செய்த சம்பவம் தொடர் பில் கைது செய்யப்பட்ட 07 சந்தேகநபர் களும் நேற்று காலை கடுவல நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் பட்டனர்.

சம்பவம் தொடர்பான உண்மைகளை நீதிமன்றில் அறிக்கையிடவுள்ளதால் சந்தேக நபர்களை தடுத்து வைத்து விசாரணை நடத்துவதற்கு அத்துருகிரிய பொலிஸார் அனுமதி கோரினர்.

சந்தேகநபர்கள் அஹுங்கல்ல, பலப்பிட்டிய, கணேமுல்ல, அம்பலாங் கொட மற்றும் பெலியத்தர ஆகிய பகுதி களில் வசிக்கும் 24 முதல் 37 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த திங்கள்கிழமை காலை அத்து ருகிரிய சந்தியில் பச்சை குத்தும் நிலை யமொன்றைத் திறந்து வைப்பதற்காக சென்ற சுரேந்திர வசந்த பெரேரா எனும் வர்த்தகர் உள்ளிட்ட இருவர் சுட்டுக்கொல லப்பட்டனர்.

# நாட்டில் நிலவும் வேலைநிறுத்தங்கள் இன்னொரு அறகலயவின் ஆரம்பமா?

## அமைச்சர் பந்துல குணவர்தன கிளப்பும் சந்தேகம்

நாட்டில் நிலவும் வேலைநிறுத்தங்கள் தேசத்தை சீர்குலைக்கும் மீண்டுமொரு அறகலயவின் ஆரம்பமாக இருக்கலாம் என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற் றிய போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர் –

"இன்று நிலவும் வேலைநிறுத் தங்கள், நாடாளுமன்ற வளாகத்தை எரிப்பதில் நிறைவடைகின்ற – நாட்டை ஸ்திரமின்மைக்கு உட்படுத்துவதற்கான – ஒரு பயிற்சியின் ஆரம்பமாக இருக் கலாம்.

பணிபகிஷ்கரிப்பில் ஈடுபடுவோர் சம்பளத்தை உயர்த்துவதற்கான சாத்தியமற்ற கோரிக்கையை முன் வைக்கின்றனர்.



ரயில்வே ஊழியர்கள் மற்றும் பிற கோரும் சம்பள உயர்விற்கான நிதியை ஒதுக்குவதற்கு, பெறுமதி சேர் வரி மற்றும் பிற வரிகளை அரசாங்கம் அதிகரிக்க வேண்டும்.

சம்பள உயர்வை வழங்க முடியாது என்பது எதிர்க்கட்சிகளுக்கு நன்றாகவே தெரியும். ஆனால், பொய்யான வாக்குறுதிகளை அளிக்கின்றனர். தயவு செய்து இதுபோன்ற செயற்களில் ஈடுபடாதீர்கள்" என அவர் மேலும் தெரிவித்தார்.

"ரயில்வே ஊழியர்கள் இன்று வேலைக்குத் திரும்பத் தவறினால் அவர்கள் வேலை நீக்கம் செய்யப்ப டுவார்கள் என்பதை நாங்கள் கருத்தில் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

அவர்கள் பயங்கரவாதத்தை ஏற்று இந்த நாட்டின் சட்டத்தின் ஆட்சிக்கு சவால் விட்டுள்ளனர் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்" – என்றும் அவர் கூறினார்.

# இன்றைய ராசி பலன்கள் - 11.07.2024




நீங்கள் எடுத்த முயற்சியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பும் முன்னேற்றமும் காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

உங்கள் பணிகளை திறமையாக கையாள்வீர்கள். புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. உங்கள் முயற்சிகளுக்கு உரிய அங்கீகாரம் பெருவீர்கள்.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் உண்மையான உறவை பகிர்ந்து கொள்வீர்கள்.பணவரவு திருப்தியை அளிக்கும். உங்கள் வங்கியிருப்பு வளர்வதைக் காண்பீர்கள்.அமைதியான அணுகுமுறை காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று திருப்தியற்ற குழப்பமான மனநிலையில் காணப்படுவீர்கள். அதனால் உரிய முயற்சிகள் எடுப்பது கடினமாக இருக்கும். தியானம் மேற்கொள்வது நல்லது.

அதிகப் பணிகள் காணப்படும். முறையாக திட்டமிட்டால் குறித்தநேரத்தில் பணிகளை முடிக்கலாம்.

உங்கள் துணையிடம் சாதரணமான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க இது அவசியம்.

இன்று பணப்பற்றாக்குறை கவலையை அளிக்கும். பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை உண்டாக்கும்.




இன்றைய நாள் சிறப்பாக இருக்காது. ஆன்மீகம் தொடர்பான பயணங்கள் நல்லது. இது அமைதியையும் ஆறுதலையும் தரும்.

இன்று பணிகள் சலிப்பைத் தரும். கூடுதல் பொறுப்புகள் ஏற்க வேண்டியிருக்கும். உங்கள் பணிக்கு பாராட்டும் அங்கீகாரமும் கிடைப்பது கடினம்.

மன சஞ்சலங்களை எதிர் கொள்ள நேரும். இதனால் துணையுடனான உறவில் மகிழ்ச்சியை பராமரிப்பது கடினமாக இருக்கும்.

பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகளால் பாதிப்பு ஏற்படும்.




இன்று சாதகமான நாளாக இருக்கும். உங்கள் நெருங்கிய நண்பர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். புதிய மனிதர்களை சந்திப்பீர்கள்.

உங்கள் பணிக்காக மேலதிகாரிகளின் அங்கீகாரம் பெறுவீர்கள். உங்கள் திறமை பாராட்டைப் பெறும். பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் அவரின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். சேமிப்பு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

கடவுள் அருளால் இன்று ஆரோக்கியமாய் இருப்பீர்கள்.




இன்று ஆற்றலும் தன்னம்பிக்கையும் குறைந்து காணப்படும். இந்த மன நிலை உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். உங்களிடம் தனிமை உணர்வு காணப்படும். இன்று எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு எதிராக அமையும்.

உங்கள் பணிகளில் தாமதங்கள் ஏற்படும். எனவே திட்டமிட்டு முறையாக பணியாற்றுவது நல்லது.

உங்கள் துணையிடம் அற்ப விஷயங்களில் குறை காண்பீர்கள். நல்லுறவை ஏற்படுத்த சகஜமான அணுகுமுறை தேவை.

உங்கள் நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. உங்கள் பணத்தை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. பல் வலிக்கான வாய்ப்பு உள்ளது.




இன்று நீங்கள் பதற்றத்துடன் குழப்பமான மனநிலையில் இருப்பீர்கள். உணர்ச்சி வசப்படாமல் அமைதியைப் பராமரித்தால் நற்பலன்களைக் காணலாம். தெய்வீக இசை கேட்பது ஆறுதல் தரும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியில் பதற்றமான சூழ்நிலை காணப்படும். உங்கள் சகபணியாளர்களிடம் நல்லுறவை பராமரிக்க முடியாது.

குறைவான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. மௌனம் கடைபிடிப்பது சிறந்தது.நிதிநிலைமை இழுபறியாக இருக்கும். பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் நிதிநிலையை கண்காணிக்க வேண்டும்.




இன்றைய நாள் துடிப்பாக இருக்கும். உங்கள் நம்பிக்கை நிறைந்து காணப்படும். எதிர்கால நலன் கருதி முக்கிய முடிவுகள் இன்று எடுக்கலாம்.

பணியிடத்தில் சமூகமான சூழ்நிலை காணப்படும். முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்களின் இனிமையான தொடர்பு காரணமாக உங்கள் துணையுடனான உறவில் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்கும். எதிர் கால பாதுகாப்பு கருதி மணம் சேமிக்கும் வாய்ப்பும் காணப்படும்.

உங்கள் ஆரோக்கியம் சீராக இருக்கும். ஆரோக்கியத்தை பராமரிக்கும் அளவுக்கு உங்களிடம் ஆற்றலும் உறுதியும் காணப்படும்.




இன்று நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள். உங்கள் முயற்சிக்கான பலனைப் பெறுவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

பணியிடச்சூழல் சீராக இருக்கும். புத்திசாலித்தனத்துடன் நீங்கள் செய்யும் முயற்சிகளில் உங்கள் நன்மதிப்பு உயரும்.

உங்கள் குடும்பத்தில் நடக்கும் சுப நிகழ்சிகள் காரணமாக உற்சாகமாக இருப்பீர்கள். இந்த நிகழ்சிகள் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள்.

இன்று பணவரவு மகிழ்சிகரமாக இருக்கும். தேவைப்படும் அளவிற்கு பணம் காணப்படும். திருப்திகரமாக இருக்கும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 11.07.2024




இன்று சிறப்பான நாளாக இருக்கும். எதிர்ப்பாராத நன்மைகள் இன்று காணப் படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியும் திருப்தியும் அளிக்கும். விருந்தினர்களின் வருகை உற்சாகத்தை அளிக்கும்.

பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். உற்சாகமான வாய்ப்புகள் காணப்படும். பணியைப் பொருத்தவரை இன்று சிறப்பான நாள்.

உங்களின் பாராட்டு வார்த்தைகள் உங்கள் துணையை திருப்தியடையச் செய்யும். நீங்கள் இருவரும் மறக்க முடியாத தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதிநிலையில் பயன் பெறக் கூடிய அதிர்ஷ்டம் காணப்படுகின்றது. அதிக அளவில் பணத்தை சேமிப்பீர்கள். இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் உறுதி காரணமாக நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று நீங்கள் வருத்தத்துடன் காணப்படுவீர்கள். உணர்ச்சிவசப்படாமல் உங்களை நீங்கள் அமைதியாக வைத்திருங்கள். இனிமையான இசையைக் கேட்பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் பதற்றமான சூழல் காணப்படும். ஓய்வெடுக்க நேரம் காணாது. திட்டமிட்டு ஒழுங்கான முறையில் பணியாற்றுவது சிறந்தது.

உங்களின் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இதனை தவிர்த்தல் நல்லது.

குடும்பத்துக்காக அதிகம் செலவழிக்க நேரும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக நிதிநிலைமையை சாதுர்யமாக கையாள்வது கடினமாக இருக்கும்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. கவனமாக மற்றும் உறுதியுடன் உங்கள் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். தெய்வீகப் பாடல்கள் மற்றும் ஸ்லோகங்கள் சொல்வது நல்ல பலனைத் தரும். பணியிடத்தில் விவேகத்துடன் செயலாற்றினால் வெற்றி நிச்சயம். சக பணியாளர்களிடமிருந்து தொல்லைகள் ஏற்படலாம்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் தக்க வைக்க முடியாது. நல்லுறவைப் பின் இத்தகைய உணர்வுகளை புறக்கணித்தல் வேண்டும்.

பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் கவலையை அளிக்கும்.




இன்று நல்ல பலன்கள் தரும் சிறப்பான நாள். விட்டுக்கொடுப்பதன் மூலம் நன்மை கிடைக்கும். இன்று நல்ல நண்பர்கள் கிடைப்பார்கள்.

இன்று பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். சக பணியாளர்களின் ஆதரவு திருப்தியை அளிக்கும். பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும்.

உங்கள் துணையிடத்தில் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதன் மூலம் இருவரிடையே நல்லுறவு காணப்படும்.

இன்று உங்கள் நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் பணிக்கான கூடுதல் பணம் ஊக்கத்தொகையாக கிடைக்கும்.

இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




